**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள், சென்னை - 6**

*****

**ந.க.எண்.17911/கே/இ2/2019, நாள். 11 .01.2021**

**பொருள்:** பள்ளிக் கல்வி – சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்– 2019–2020 ஆம் கல்வியாண்டு– அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகள்–மாணவ / மாணவியரின் விவரங்கள் – மீளவும் சரிசெய்து அனுப்பக் கோரப்படுவது– சார்ந்து.

**பார்வை:**
1. சென்னை–6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் இதே எண்ணிட்ட கடிதம் நாள்.03.04.2019, 14.10.2019, 11.02.2020, 25.02.2020,13.10.2020 மற்றும் 15.12.2020
2. EMIS இணைய தளத்தில் இருந்து பெறப்பட்ட மாணவர்களின் விவரங்கள்.
3. சென்னை–35, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன கடிதம் எண்.PF/SED/2020, நாள்.27.10.2020 மற்றும் 10.12.2020

*****

பார்வை (1)–ல் கண்டுள்ள செயல்முறைகளின் மீது அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேரடி தனிக்கவனம் ஈர்க்கப்படுகிறது.

அதில் 2019–2020 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் (சுயநிதிப் பிரிவு நீங்கலாக) 12 ஆம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியருக்கு இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் பார்வை (2)–ல் கண்டுள்ளவாறு தொடர்புடைய மாணவ, மாணவியரின் விவரங்களைக் கல்வி தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS Web Portal) இருந்து பெற்று தொகுத்து, சென்னை–35, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.

அவ்வாறு அனுப்பப்பட்ட மாணவர்களின் விவரங்களில், வங்கி சேமிப்பு கணக்கு எண் IFSC Code No, MICR No, வங்கியின் பெயர், வங்கி கிளை உள்ள இடம் ஆகிய விவரங்கள் சரிவர பதிவு செய்யப்படாதது கண்டறியப்பட்டு,

அவற்றை சரிசெய்து மீளவும் அனுப்புமாறு பார்வை (3)-ல் கண்டுள்ள கடிதங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சில வங்கிகள் வேறொரு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. இதன் காரணமாக மாணவகளின் வங்கிக்கணக்கு சார்ந்த விவரங்களில் மாற்றம் இருக்க வாய்ப்புள்ளது.

எனவே, இத்துடன் இணைத்தனுப்பப்படும் பட்டியலில் உள்ள மாணவ, மாணவியர் சார்ந்த விவரங்களை கீழ்க்கண்டவாறு ஆய்வு செய்து மீளவும் சரியாக பதிவிட்டு அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மாணவ, மாணவியரின் பெயர் EMIS No, Register No, (பள்ளி ஆவணங்களின்படி ஒப்பீடு செய்து) பதிவு செய்யப்பட வேண்டும்.
2. வங்கி சேமிப்பு கணக்கு எண்ணின் முதல் இலக்க எண்.0 (Zero) என இருந்தால், அதையும் சேர்த்து முழுமையான இலக்க எண்களைப் பதிவு செய்தல் வேண்டும். (இடைவெளியின்றி)
3. வங்கி சேமிப்பு கணக்கு எண், IFSC Code, MICR No, ஆகியவற்றை பதிவு செய்யும் பொது '0' (Zero) என்பதற்குப் பதிலாக 'O' (ஓ) என்றும், "O" (ஓ) என்பதற்குப் பதிலாக '0' (Zero) என்றும் 'I' (ஐ) என்பதற்குப் பதிலாக '1' என்றும் '1'(ஒன்று) என்பதற்குப் பதிலாக 'I' (ஐ) என்றும் பதிவு செய்யப்பட்டு உள்ளது. எனவே வங்கி கணக்குப் புத்தகத்தை ஒப்பிட்டு சரிபார்த்து இவ்வாறான இலக்கங்களை மிகச் சரியாகப் பதிவு செய்தல் வேண்டும். மாணவ, மாணவியரின் வங்கி சேமிப்பு கணக்கு தற்போது உபயோகத்தில் உள்ளதா என வங்கி புத்தக நகல் கொண்டு சரிபார்க்கப்பட வேண்டும்.
4. மாணவ, மாணவியரின் வங்கி கணக்கு மற்றொரு வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தால், அவ்வங்கியின் பெயர், IFSC CODE No, MICR No, ACCOUNT No. வங்கிக் கிளையின் அமைவிடம் ஆகிய விவரங்களை முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
5. மேற்கண்ட வங்கி சார்ந்த விவரங்களை ஏற்கனவே மாணவரால் பள்ளியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களைக் கொண்டு சரிபார்க்காமல், தொடர்புடைய மாணவர் அல்லது அவர்தம் பெற்றோரை நேரில் சம்மந்தப்பட்ட வங்கிக்கு சென்று அனைத்து விவரங்களையும் உறுதி செய்து கொண்டு வந்து விவரங்களை அளிக்குமாறு தெரிவித்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்களை முழுமையாகப் பதிவு செய்து உரிய ஆவணங்களின் அடிப்படையில் ஒத்திசைவு செய்து மீளவும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தொடர்புடைய தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், அவ்வாறு பெறப்பட்ட விவரங்களை, மாவட்ட வாரியாக தொகுத்து முதன்மைக் கல்வி அலுவலர் அளவில் சரிபார்த்து எவ்விவரங்களும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்த பின்னர், "ksec.tndse.in" என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 22.01.2021–க்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இப்பொருள் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளது எனவே, மேற்கண்டுள்ள காலக்கெடுவிற்குள் விவரங்களை அனுப்பாத பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் தொடர்புடைய பணியாளர்கள் குறித்த விவரங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு செய்யப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**"மிக மிக அவசரம்"**

**இணைப்பு**

சரிசெய்யப்பட வேண்டிய மாணவர்/மாணவியர் விவரங்கள்

**இணை இயக்குநர் (தொழிற்கல்வி)**

11.1.21

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,

மு.அ4